www.Padasalai.Net

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள்,

சென்னை – 600 006.

ந.க.எண்.2411/எஃப்2/2021, நாள். 18.10.2024.

......

பொருள்: மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6- எண்ணும் எழுத்தும் திட்டம் – 2024 -2025 ஆம் கல்வியாண்டில் செயல்படுத்துதல் – 1 முதல் 5 ஆம் வகுப்புகளுக்கு – இரண்டாம் பருவத்திற்கான இணைய வழி பயிற்சியினைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு நேரடி பயிற்சியாக ஒன்றிய அளவில் நடத்துதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (ப)எண் 46.,பள்ளிக் கல்வித் (ERT) துறை நாள் 05.02.2024
2. இவ்வலுவலகக் கடிதம் இதே ந.க.எண் மற்றும் நாள் 03.10.2024.
3. பள்ளிக் கல்வித்துறை செயலர் அவர்களின் அறிவுரை நாள்.16.10.2024

......

பார்வை(1) இல் காணும் அரசாணையின்படி, எண்ணும் எழுத்தும் 1 முதல் 5 ஆம் வகுப்பிற்கு இரண்டாம் பருவ பாடப்பொருள் சார்ந்து அனைத்து ஆசிரியர்களுக்கும் இணையவழி மூலம் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டு, பார்வை(2)இல் உள்ள கடிதத்தின்படி, தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு இணைய வழி பயிற்சியினை ஆசிரியர்கள் மேற்கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில், 14.10.2024 முதல் 25.10.2024 வரை TNTP Portal மூலம் அனைத்து ஆசிரியர்களும் இணையவழி பயிற்சியை வழங்கிடும் வகையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே எண்ணும் எழுத்தும் சார்ந்து இரண்டு ஆண்டுகளாக ஒவ்வொரு பருவத்திற்கும் மற்றும் 2024-25ஆம் கல்வியாண்டில் முதல் பருவத்திலும் நேரடி பயிற்சியாக ஆசிரியர்கள் தெளிவுற பயிற்சி பெற்றுள்ள நிலையில், பார்வை (3) இன்படி, எண்ணும் எழுத்தும் இரண்டாம் பருவத்திற்கான பயிற்சியினையும், நேரடி பயிற்சியாக வழங்கிட பள்ளிக் கல்வி செயலர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

www.Padasalai.Net

தற்போது ஏற்கனவே அறிவுறுத்தியதன்படி, இரண்டாம் பருவத்திற்கான பயிற்சியினை, 1 முதல் 5 ஆம் வகுப்பு கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் இணைய வழியாக 25.10.2024க்குள் எடுத்துக் கொண்டு, 28.10.2024 மற்றும் 29.10.2024 அன்று 1 முதல் 3 ஆம் வகுப்பிற்கும், 04.11.2024 மற்றும் 05.11.2024 அன்று 4 மற்றும் 5 ஆம் வகுப்பிற்கும் ஒன்றிய அளவில் பயிற்சி சார்ந்த சந்தேகங்களை மட்டும் நேரடியாக உரிய மாவட்ட கருத்தாளர்களிடம் கேட்டு தெளிவு பெறும் வகையில் நேரடி பயிற்சியாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது .

இது தொடர்பாக மாநில, மாவட்ட மற்றும் ஒன்றிய அளவிலானபயிற்சி சார்ந்த திட்டமிடல் கூட்டத்தினை 21.10.2024 அன்று அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் நடத்திடுமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இத்திட்டமிடல் கூட்டத்தில் அந்தந்த மாவட்டத்தின் ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஏற்கனவே மாநில அளவில் பயிற்சி பெற்ற கருத்தாளர்களை தெரிவு செய்ய வேண்டும்.

22.10.2024 (1 முதல் 3 ஆம் வகுப்பிற்கும்) மற்றும் 23.10.2024 (4 மற்றும் 5 ஆம் வகுப்பிற்கு) அன்று அந்தந்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாநில கருத்தாளர்களை ஒருங்கிணைத்து எண்ணும் எழுத்தும் பாட உருவாக்கக்குழுவினறால் இணைய வழியில் பயிற்சி பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். மேலும் ஒன்றிய அளவிலான பயிற்சிக்கு ஒரு பயிற்சி அறைக்கு இரண்டு மாவட்ட கருத்தாளர்களை தெரிவு செய்ய வேண்டும்.

பயிற்சி பெற்ற மாநில கருத்தாளர்கள் தெரிவு செய்யப்பட்ட மாவட்ட கருத்தாளர்களுக்கு 24.10.2024 அன்று 1 முதல் 3 ஆம் வகுப்பிற்கும், 25.10.2024 அன்று 4 மற்றும் 5 ஆம் வகுப்பிற்கும் மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து நேரடியாக பயிற்சியினை வழங்கிட வேண்டும்.

பயிற்சி பெற்ற மாவட்ட கருத்தாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒன்றியத்திற்கு 28.10.2024 மற்றும் 29.10.2024 அன்று 1 முதல் 3 ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் , 04.11.2024 மற்றும் 05.11.2024 அன்று 4 மற்றும் 5 ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எண்ணும் எழுத்தும் பாடப்பொருள் கற்பிப்பது சார்ந்து, எழும் சந்தேகங்களை தீர்க்கும் வகையில் பயிற்சியினை வழங்க வேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிகளில் ஒன்றியத்திலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ஏதேனும் ஒரு நாள் 1 முதல் 3 ஆம் வகுப்பிற்கும், மற்றொரு நாள் 4 மற்றும் 5 ஆம் வகுப்பிற்கும் பயிற்சியினை நடத்திக் கொள்ளலாம்.

www.Padasalai.Net

மேலும், 22.10.2024, 23.10.2024, 24.10.2024 மற்றும் 25.10.2024 அன்று நடைபெற இருக்கும் மாநில மற்றும் மாவட்ட கருத்தாளர்களுக்கான பயிற்சிக்கு தேவைப்படும் அனைத்து ஏற்பாடுகளையும் (பயிற்சி அறை, LCD Projector, Internet, mic, Tea&Snacks) மற்றும் இதர செலவினங்களை செய்வதற்கு அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. உத்தேசமாக ஒரு ஆசிரியருக்கு நாளொன்றுக்கு 100 ரூபாய் வீதம் செலவினத்தை மேற்கண்ட பயிற்சிக்கும் மற்றும் ரூபாய் 50/-னை (Tea&Snacks) சிற்றுண்டி செலவினத்திற்கும் ஒன்றிய அளவிலான பயிற்சிக்கும் அளித்திடுமாறும், இச்செலவினத்தினை அந்தந்த மாவட்ட திட்டம் மற்றும் செயல்பாடுகள் (Programme & Activities) நிதி அல்லது ஆண்டு பராமரிப்பு நிதியில் இருந்து தற்காலிகமாக செலவினம் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இப்பயிற்சிக்கு ஏற்படும் அசல் செலவின (Actual Expenditure) விவரங்களை பட்டியலிட்டு உரிய பற்றுச்சீட்டுகளுடன் மற்றும் வங்கிக் கணக்கு எண் குறிப்பிட்டு இந்நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் அச்செலவினத்தை தங்களது நிறுவன வங்கிக் கணக்கில் ஈடு செய்யும் வகையில் இந்நிறுவன எண்ணும் எழுத்தும் நிதியிலிருந்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

18/10/24

இயக்குநர்

18.10.24

பெறுநர்

i) அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்
ii) அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்

1. அரசு செயலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை - 600 006. அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
3. தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை - 600 006. அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.